செ.வெ.எண்: 24 நாள்: 11.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டம்**

**மாவட்ட அளவிலான குடும்பநல அறுவை சிகிச்சை தொடர்பான தரஉறுதி நிலைபடுத்துதல் மற்றும் காப்பீடு திட்ட செயல்பாடுகள் குறித்த அரசு மற்றும் தனியார் அறுவை சிகிச்சை மருத்துவர்கள், மயக்க மருத்துவர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கான ஒரு நாள் பயிலரங்கம் மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.08.2021) நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட அளவிலான குடும்பநல அறுவை சிகிச்சை தொடர்பான தரஉறுதி நிலைபடுத்துதல் மற்றும் காப்பீடு திட்ட செயல்பாடுகள் குறித்த அரசு மற்றும் தனியார் அறுவை சிகிச்சை மருத்துவர்கள், மயக்க மருத்துவர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கான ஒரு நாள் பயிலரங்கம் மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.08.2021) நடைபெற்றது.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், மருத்துவமனைகள் மற்றும் அரசு அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளிலும் வழங்கப்பட்டு வரும் மருத்துவ சேவைகள் அனைத்திலும் உத்தரவாதமும், பாதுகாப்பும் இருக்கும் வகையில் சிகிச்சைகளும், பராமரிப்பு பணிகளும் எவ்வாறு அமைய வேண்டும் என்றும், அறுவை சிகிச்சை தொடர்பான தரஉறுதி நிலைபடுத்துதல் மற்றும் காப்பீடு திட்ட செயல்பாடு குறித்தும், பயிலரங்கிற்கு வருகை தந்திருந்த அரசு மற்றும் தனியார் அறுவை சிகிச்சை மருத்துவர்கள், மயக்க மருத்துவர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் குடும்பநலம் மரு.ஜே.ஜோஸ்பின் அமுதா, மாவட்ட மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.வி.விஸ்வநாதன், இணை இயக்குநர் நலப்பணிகள் மரு.டி.ராணி, துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.விஜயகுமார், அரசு மற்றும் தனியார் மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**